2010 மே 11]

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழு உரையைக் கேட்பதற்காகத்தான் அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய விளக்கங்களை, ஆதாரங்களோடு பதில் சொல்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. ஓடி ஒளிவதற்காக இந்த அரசு எப்போதும் இருக்காது என்பதை நான் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, ஆதாரங்கள் இருந்தால் அதைத் தந்துவிட்டு தயவுகூர்ந்து அதுகுறித்துப் பேசவேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆதாரம் இருக்கிறதா? ஆதாரம் தந்துவிட்டுப் பேசுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** அதை . . . *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு ** அதெல்லாம் இங்கே சொல்ல முடியாது. இங்கே அவையிலே பேசும்போது proof உடன் பேசுங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐயப்பாடுகளை வைத்து ஆதாரப்பூர்வமான செய்தி என்று குறிப்பிட்டால், இந்தப் பழக்கத்தை அல்லது இந்த முறையை ஒவ்வொரு உறுப்பினரும் கையாள நேரிடும். இந்த ஐயப்பாட்டிற்கு உங்கள் விளக்கம் என்ன என்று ஒவ்வொருவரும் கேட்டால், அது என்ன ஐயப்பாடு என்பது புரியாத புதிராக ஆகிவிடும். ஐயப்பாட்டை ஆதாரப்பூர்வமாக நீங்கள் கேட்கவேண்டும். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சேகர்பாபு, திரு. விசுவநாதன், திரு. ரவிச்சந்திரன், திரு. ஜெயக்குமார் எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். ** என்று சொன்ன அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்கியாகிவிட்டது. *(குறுக்கீடுகள்)* மற்றதைப் பேசுங்கள். இங்கே சபையிலே ஆதாரத்தோடு பேசுங்கள். இல்லாவிட்டால் allow பண்ணமுடியாது. *(குறுக்கீடுகள்)* பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஆதாரம் கேட்டீர்கள். கடந்த நான்கு நாட்களாக அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் டேப் சம்பந்தமாக ஒளிபரப்பானதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதன் அடிப்படையில் சில தகவல்களை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் பார்க்கவில்லை. *(குறுக்கீடுகள்)* நான் பார்க்கவில்லை, சார்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி. நான் பேசி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அப்போது அமைச்சராக இருந்த திரு. குழந்தைவேலு அவர்கள் "கருணாநிதி – தேனிக்குப் பக்கத்திலே உள்ள முத்துத்தேவன்பட்டியிலே ஒரு தோட்டம் வாங்கியிருக்கிறார்" என்று என்மீது ஒரு குற்றத்தைச் சுமத்தினார். அப்போது பெரியகுளம் நாடாளுமன்ற இடைத் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போதே நான் கூட்டங்களிலே "அங்கே நான் தேர்தல் பணிக்காகத் தங்கியிருக்கின்ற இடம் என்னுடைய இடமும் அல்ல; நான் வாங்கியிருக்கின்ற தோட்டமும் அல்ல. அது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த – இன்றைக்கு இங்கே எம்.எல்.ஏ.–வாக இருக்கின்ற தம்பி இராமகிருஷ்ணனின் அண்ணன் தோட்டம். அதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை" என்று சொல்லிப் பார்த்தேன்.

அதற்குப் பிறகும், "இல்லை, இல்லை. கருணாநிதி தோட்டம் வாங்கியிருக்கிறார் முத்துத்தேவன்பட்டியில். இத்தனை இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள தோட்டம்" என்று சொல்லப்பட்டது. "ஆதாரம் எங்கே?" என்று கேட்டேன். "ஆதாரத்தைச் சட்டசபையிலே தருகிறேன்" என்று சொன்னார். பின்னர் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நேராக இந்த விவாதம் சட்டமன்றத்தில் வந்தது. அப்போது நம்முடைய துரைமுருகன் அவர்கள், அந்த அமைச்சரைப் பார்த்து, "நீங்கள் சொல்வது தவறு; முத்துத்தேவன்பட்டியிலே கருணாநிதி நிலம் வாங்கியிருந்தால், தோட்டம் வாங்கியிருந்தால், அதற்கு என்ன

2010 மே 11] [கலைஞர் மு. கருணாநிதி]

ஆதாரம்?" என்று கேட்டார். "நான் ஆதாரத்தோடு நிரூபிக்கிறேன். நிரூபிக்காவிட்டால், அமைச்சர் பதவியிலிருந்து விலகுகிறேன்" என்று சொன்னார்.

அழுத்தந்திருத்தமான அந்த அறைகூவலை ஏற்றுக்கொண்டு, நானும் எழுந்து – "நான் இதுவரையில் பேசாமல் இருந்தேன். காரணம், முதலமைச்சர் – அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களே உண்மையைப் புரிந்து கொண்டிருப்பார் என்று கருதி மௌனமாக இருந்தேன். அதையும் மீறி அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் பேசுகின்ற காரணத்தால், இப்பொழுது சொல்கிறேன். முத்துத்தேவன்பட்டியிலே எனக்கு எந்தத் தோட்டமும் இல்லை; துரவும் இல்லை; எந்த நிலமும் இல்லை. அவருடைய அறைகூவலை, challenge-ஐ நான் ஏற்றுக்கொள்கிறேன். அவர் அதை நிரூபித்தால், நான் எம்.எல்.ஏ. பதவியை மாத்திரமல்ல; பொது வாழ்விலிருந்தே விலகிக் கொள்கிறேன். ஆனால், குறைந்தபட்சம் அவர் அமைச்சர் பதவியிலிருந்து விலகுவாரா?" என்று கேட்டேன். "விலகத் தயார்" என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய முன்னிலையிலேயே அவர் சொன்னார். அப்போது அவைத் தலைவராக திரு. ராஜாராம் அவர்கள் இருந்தார்கள். "ஒரு வாரத்தில் அதனை நிரூபிக்கிறேன்" என்று திரு. குழந்தைவேலு சொன்னார். ஒரு வாரம் கழித்து, நான் தினம் தினம் எழுந்து – "ஆதாரம் எங்கே? ஆதாரம் எங்கே?" என்று கேட்பேன். "நாளைக்கு, நாளைக்கு" என்றார். ஒரு வாரம் கழித்து, ஆதாரத்தைக் கொண்டு வந்து சட்டசபையிலே கொடுத்தார். வாங்கிப் பார்த்தால் போலிக் கையெழுத்து. எந்த உண்மைக் கையெழுத்தும் கிடையாது. என்னுடைய மகன் அழகிரி பெயரால் அந்த இடத்தை வாங்கியிருப்பதாக அதிலே காட்டப்பட்டு, அமைச்சர் குழந்தைவேலு அவர்களே கையெழுத்திட்டு, அதை நான் வாங்கியது போல ஒரு நாடகம் ஆடி, ஒரு பத்திரத்தைக் கொடுத்தார்.

முற்பகல் 10–55

சபாநாயகராக இருந்த நண்பர் ராஜாராம் அவர்கள், எதிர்க்கட்சி, தோழமைக் கட்சி – எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து, அவரது அறையிலே உட்கார வைத்து, அந்த ஆதாரத்தைக் காட்டி, "என்ன சொல்கிறீர்கள்" என்று கேட்டார். ராஜாராம் அவர்கள் அப்போது அ.தி.மு.க. சார்பாக சபாநாயகராக இருந்தார். எல்லோரும் அதைப் பார்த்துவிட்டு,

"ஆதாரம் இல்லை; இது தவறான குற்றச்சாட்டு" என்று சொன்னார்கள். அதற்குப்பிறகு, நாள்தோறும் நான் சட்டசபையிலே "ஆதாரத்தைக் காட்டாவிட்டால், அமைச்சர் பதவியிலிருந்து விலகுகிறேன் என்று சொன்னாரே, எப்போது பதவி விலகப் போகிறார்" என்று கேட்டேன். என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு புன்னகைமூலமாக என்னைச் சமாதானப்படுத்தி, "இதோடு விட்டுவிடுங்கள்" என்று கேட்டார். பாவம், அவரே கேட்கிறாரே என்பதற்காக அதோடு விட்டுவிட்டேன். குழந்தைவேலு அன்றைக்கு அந்த அறைகூவலை எப்படிச் சமாளித்தாரோ, அதைப்போல நீங்களும் சமாளிக்க முன்வராதீர்கள். ஒன்றை மாத்திரம் நான் எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அருமை நண்பர் பன்னீர்செல்வம் அவர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன்.

நேற்றையதினம் இதே பிரச்சினைக்காக நீங்களெல்லாம் வெளிநடப்புச் செய்தபோது, வெளியிலே சென்று என்னென்ன வார்த்தைகள் பயன்படுத்தியிருக்கிறார்கள் உங்கள் தலைமையிலே உள்ள அ.தி.மு.க. எம்.எல்.ஏ.-க்கள் என்பதைத் தயவு செய்து நிருபர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். நிருபர்கள் சொல்லமாட்டார்கள். காரணம், பத்திரிகைகளிலே போடக்கூட முடியாத, அவ்வளவு கேவலமான சொற்கள்; என்னைப் பற்றியும், அரசைப் பற்றியும், என் குடும்பத்தைப் பற்றியும் அங்கே பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன.

இவையெல்லாம் உங்களுக்கு உகந்ததுதானா? இவற்றையெல்லாம் நீங்கள் அனுமதிக்கிறீர்களா? இப்படியெல்லாம் ஒரு நாகரீகத்தை நாம் வளர்க்க வேண்டுமா என்பதை நான் உரிமையோடும், பழகிய பாசத்தோடும், ஏற்கெனவே ஒன்றாக இருந்த ஒரு குடும்பத்தில் இருந்த நண்பர்கள் என்ற முறையிலும் கேட்க விரும்புகிறேன். இதெல்லாம் சரிதானா என்பதைத் தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசியலில் ஆயிரம் கருத்து மாறுபாடுகள் வரலாம். கொள்கை மாறுபாடுகள் வரலாம். ஆனால், தனிப்பட்ட முறையிலே, இவ்வளவு வேகமாக, மோசமாக விமர்சிப்பது, கோஷம் போடுவது – இவையெல்லாம் நியாயம்தானா என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்து, அதற்குப் பிறகு இந்தப் பிரச்சினையிலே தொடர்ந்து பேசுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

2010 மே 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) திரு. அரி, உட்காருங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நண்பர் அரியைப் பற்றி, அவருடைய கட்சியிலே என்ன அபிப்பிராயம் உள்ளது என்பது எனக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி என்ற நிலையில் கேட்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. பதில் சொல்ல வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது என்பதை நான் நினைவூட்டிவிட்டு, TIDCO போட்ட ஒப்பந்தத்தில் அரசின் சார்பாக சில மானியங்கள்—packages—அவர்களுக்கு சலுகையாக நீங்கள் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலமாக அரசு கொடுத்திருக்கும் என்று அறிகின்றேன். எவ்வளவு நிலம் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்மூலம் வழங்கப்பட்டது? அந்த நிலத்தினுடைய சந்தை மதிப்பு என்ன? அரசு மதிப்பு என்ன? Guideline value என்ன? வேறு என்னென்ன சலுகைகள் இந்த அரசுமூலமாக அந்த நிறுவனங்கள் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்மூலமாக பெற்றிருக்கிறார்கள் என்பதை அரசு ஒரு வெள்ளை அறிக்கையாக இந்தச் சட்டமன்றத்தில் வைக்க வேண்டுமென்று நான் இந்த அவையில் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை தரமணியில், தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பது பற்றிய அரசினுடைய அறிவிப்பு குறித்து, சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் மாண்புமிகு